தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெறும்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு முப்பெரும் விழாவில் மாணவர் அணியினர் திரளாகப் பங்கேற்போம்!

சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்த மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 21-

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 18.5.2023 அன்று அண்ணா அறிவாலயத்தில் உள்ள, "கழக அலுவலகத்தில்", கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்பி.எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமையில், அணியின் தலைவர் இரா. ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கலந்தாலோசனை கூட்டத்தில், அணியின் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், பூர்ண சங்கீதா, ஜெ.வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

திராவிடமாடல் ஆட்சி வெல்க!

உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் பல்லாயிரம் ஆண்டு பழந்தமிழின் முத்தமிழ் அறிஞர் - பெரியாரின் சலியாத உழைப்பும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பரந்த உள்ளமும் தன்னகத்தே கொண்டிருந்தவர் - உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் இந்திய நிலப்பரப்பில் தமிழ்நாட்டை தலைநிமிர வைத்த சிற்பி பலமுறை இந்திய பிரதமர்களை உருவாக்கிய பிதாமகர் -95 ஆண்டு கால வாழ்நாளில் 80 ஆண்டு காலத்தை பொதுவாழ்க்கைக்கு ஒப்படைத்த ஓய்வறியா போராளி - போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற சாதனை நாயகர் தாய்த்தமிழ் நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராய் பொறுப்பேற்று 19 ஆண்டுகள் ஆட்சி செய்த தலைசிறந்த நிர்வாகி - தன் அரசியல் அனுபவங்கள் அனைத்தையும், அடித்தட்டில் வாழ்கிற மக்களின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தியவர் - 75 ஆண்டு கால எழுத்துப் பணி - 60 ஆண்டு கால சட்டமன்றப் பணி அரை நூற்றாண்டு காலத் திரையுலகத்தின் திசையைத் தீர்மானித்த வசனகர்த்தா-எழுஞாயிறு எழும் நாளெல்லாம் எழுதித் தீட்டி இலக்கியமாய் இயங்கிய எழுத்து இலக்கணம்-மேடையில் மெல்லிய பூங்காற்றாகவும், எரிமலைத் தீப்பிழம்பாகவும் காட்சியளித்த காந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் -நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவர்-நமக்கு உயிரானவர் - திராவிடத்தின் கருவானவர் நமக்குத் திருவானவர் - இன்றும் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வரும் சூன் 3 ஆம் நாள் நூற்றாண்டு விழா தொடங்குகிறது. தமிழின உரிமைகள் தமிழ்நாட்டின் உயர்வு - திராவிடச் சிந்தனை சுயமரியாதை மாநில சுயாட்சி சகோதரத்துவம் மதச்சார்பின்மை சாதிஒழிப்பு ஒடுக்கப்பட்டோர் நலன் சமூகநீதி பெண்ணுரிமை இலக்கிய வளர்ச்சி கலைத்துறை மேம்பாடு எனப் பலமுனைப் பங்களிப்புகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றி இருக்கிறார்கள். எந்த நோக்கத்துக்காக தனது வாழ்க்கையையே தலைவர் கலைஞர் அவர்கள் ஒப்படைத்துக்கொண்டார்களோ அந்த நோக்கத்துக்காக தலைவர் கலைஞர் அவர்களின் வழித்தடத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் வார்ப்பாக மட்டுமல்லாமல், முத்தமிழறிஞராகவே செயல்பட்டு வரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அயராது பணியாற்ற இக்கூட்டம் உறுதி ஏற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை வெகுசிறப்பாக ஓராண்டு முழுவதும் பொது மக்களுக்குப் பயனுள்ளதாக கொண்டாடிடும் வகையில், கழக மாணவர் அணி சார்பில் கழக இரு வண்ண கொடியேற்றி, எளியோர்களுக்குப் பசியாற்றும் முகாம்கள், வேட்டி, சேலை வழங்குதல், மாணவர்களுக்கு இலவச நோட்டு, புத்தகங்கள், கல்வி உதவித் தொகை வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துதல், விளையாட்டுத் துறையில் சாதிக்க நினைக்கும் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துதல், அரசியல் அறிவுத் தேடலுக்கான கருத்தரங்குகள், கவியரங்கம், பட்டிமன்றங்கள் நடத்துதல், மருத்துவ முகாம்களை நடத்துதல், இரத்ததான முகாம்களை நடத்துதல், மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச மூன்று சக்கர வாகனங்கள் வழங்குதல் போன்ற பணிகளை கழக மாணவர் அணியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தங்கள் பகுதியில் தொண்டர்களின் இல்ல விழாவாக - மக்கள் விழாவாக - கொள்கை விழாவாக - வெற்றி விழாவாக - இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வகையில் மிகச் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று இக்கூட்டத்தில் பெருமகிழ்ச்சியுடன் தீர்மானிக்கப்படுகிறது.

முத்தமிழறிஞரின் நூற்றாண்டு விழாவில் முப்பெரும் விழாக்கள்!

மாணவர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

தலைமைக் கழகத்தின் சார்பில், தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு, அனைத்துக் கட்சி தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக் கூட்டம், வரும் 03.06.2023 அன்று சென்னையில் நடைபெற இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாட்டு நலன் குறித்து தம் வாழ்நாள் முழுவதும் சிந்தித்து, எண்ணற்ற நலத்திட்டங்களை மருத்துவத் துறையில் செயல்படுத்தி காட்டிய முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள, பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை வரும் 05.06.2023 அன்று இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் திறந்து வைக்கும் விழா நடைபெற உள்ளது. மேலும், அன்று மாலையே நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவும் நடைபெற உள்ளது.

மேலும், தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இந்தியத் திருநாட்டிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பங்களிப்பினை பசுமையான நினைவுச் சின்னங்களாக வார்த்தெடுக்கும் வகையில், தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில், திருவாரூரில் கட்டப்பட்டுள்ள "கலைஞர் கோட்டம்" அருங்காட்சியகம் திறப்பு விழா வரும் 15.6.2023 அன்று நடைபெற வுள்ளது. அவ்விழாவில், காலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்களும், மாலையில் அகில இந்தியத் தலைவர்களும் கலந்துக் கொண்டு உரையாற்ற இருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெறும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த முப்பெரும் விழாக்களில் கழக மாணவர் அணியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

"கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்" போட்டிகள்!

பேச்சு, எழுத்து என இரண்டிலும் தனி அடையாளத்துடன் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சிறப்புகளை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில், தமிழின தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாவட்டந்தோறும் பள்ளி மற்றும் கல்லூரி அளவிலான பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நடத்தி, அதில் தேர்வாகிறவர்களுக்கு நிறைவாக மாநில அளவில் "மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்" எனும் தலைப்பில் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

கருத்தரங்கம்!

தனது 16 வயதில், பள்ளி பருவத்திலேயே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "மாணவ நேசன்" என்ற கையெழுத்துப் பிரதியை தொடங்கி நடத்தினார். அன்று முதல் தனது இறுதி வாழ்நாள் வரையிலும் மாணவர்களின் நலனுக்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக துயிலுறங்காமல் திட்டங்களை தீட்டி செயல்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயரிய எண்ணங்களை, மாணவர் சமுதாயத்திடம் கொண்டு செல்லும் நோக்கத்தோடு, தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, "மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 கருத்தரங்கங்கள்" மாவட்டந்தோறும் நடத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டிகள்!

மாணவர்கள்இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாவட்ட அளவில் மாணவர் பங்கேற்கும் "மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100" பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மாணவர் விடுதிகளில் சிறப்பு விருந்து!

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு, அரசுப் பள்ளி, கல்லூரி மாணவ - மாணவியர்கள் தங்கும் விடுதிகளில், அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மாணவர் கூட்டமைப்பு!

சமூகநீதி கல்வி உரிமை மாநில உரிமை - கூட்டாட்சி கட்டமைப்பு ஆகியவற்றை சிதைத்து, மாணவர் விரோத தேசிய கல்விக் கொள்கையை திணிக்கின்ற பாசிச பா.ஜ.க. அரசின் கொள்கையை எதிர்க்கும் இந்தியாவிலுள்ள ஜனநாயக, முற்போக்கு, மதச்சார்பற்ற சிந்தனைக் கொண்ட மாணவர் அமைப்புகள், மாணவர்களிடம் கருத்தியல் பரப்புரை செய்ய, களத்தில் போராட இந்திய அளவில் மாணவர் கூட்ட மைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 27.04.2023 அன்று, காணொலி வாயிலாக நடைபெற்ற இந்திய அளவிலான முற்போக்கு சிந்தனையுள்ள மாணவர் அமைப்புகள் இணைந்து, ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, கடந்த 12.05.2023 அன்று டெல்லி, எச்.கே.எஸ். சுர்ஜீத் பவன் வளாகத்தில் உள்ள கூட்ட ரங்கில் நடைபெற்ற முதற் கட்ட கலந்துரையாடல் கூட்டத்தில், எஸ்.எஃப்.ஐ. தேசிய தலைவர் அவர்கள் தலைமையில், நமது கழக மாணவர் அணி, ஏ.ஐ.எஸ்.எஃப் (AISF), என்.எஸ்.யு.ஐ. (NSUI), ஏ.ஐ.எஸ்.ஏ. (AISA), ஏ.ஐ.எஸ்.பி (AISB), சி.ஒய்.எஸ்.எஸ். (CYSS), சி.ஆர்.ஜெ.டி. (CRJD), பி.எஸ்.யூ. (PSU), சமாஜ்வாடி சத்ரா சங்கர்ஸ் (SCS), பி.எஸ்.எஃப். (PSF) உள்ளிட்ட மாணவர் அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்று, இந்திய அளவில் மாணவர் கூட்டமைப்பு ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

அக்கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாக, இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கியிருக்கும் ஜனநாயக, மதச்சார்பற்ற, சமத்துவ, சமூகநீதி, கல்வி உரிமை, மாநில உரிமை, கூட்டாட்சி கட்டமைப்பு ஆகிய அனைத்தையும் சிதைக்கின்ற வகையில் பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசின் மாணவர் நலனுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள, தேசிய கல்விக் கொள்கை திட்டத்தினை கண்டித்து, இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும், மாணவர் அமைப்பின் கூட்டமைப்பை உருவாக்கி, மாநில அளவிலான போராட்டத்தை நடத்தவும், பின்னர் டெல்லியில் மாபெரும் பேரணியுடன் கூடிய போராட்டத்தை நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

மேலும், தேசிய கல்விக் கொள்கைக்கு மாற்றாக இந்திய அளவில் கல்வித் துறைக்கான வழிகாட்டு நெறிமுறைகளை கூட்டமைப்பு ஆய்வு செய்து, வரைவு தயார் செய்து, இந்திய ஒன்றிய அரசு செயல்படுத்திட வலியுறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. கழக மாணவர் அணியின் சார்பில்,

கூட்டமைப்பின் சார்பில் தயாரிக்க இருக்கும் வரைவு அறிக்கையின் முன்னுரையில் (PREAMBLE) குறிப்பாக, இந்தியா என்பது ஒரு துணைக் கண்டம், பல மாநிலங்களின் ஒன்றியம், பலதரப்பட்ட மொழி பேசுபவர்களாக, கலைப் பண்பாட்டு, பழக்க வழக்கங்களை கொண்டவர்களாக, மொத்தத்தில் பன்முகத்தன்மையுடன் வாழுகிற மக்கள், இந்தியா ஒற்றுமையோடு விளங்குவதற்குண்டான பெருமைக்குரியவர்கள்.

எனவே, அவரவர் மொழி உரிமை, கலை பண்பாட்டு உரிமை பாதிக்காத வகையில் கல்வி முறை, அவரவர் மாநிலத்திற்கு ஏற்றவாறு ஏற்படுத்திட, அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்ட போது இருந்ததைப் போல கல்வியை மீண்டும் மாநில அரசின் பட்டியலில் சேர்த்திடுவது தான் இதற்கு முழுமையான தீர்வாக அமையும் என வலியுறுத்தி, மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் செயல் திட்டங்களை, கொள்கை திட்டங்களை, சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களையும், சட்ட மசோதாக்களையும் நியமன பொறுப்பில் வருகிற ஆளுநர்கள் அரசியலமைப்பு சட்டம் வழங்கியிருக்கக்கூடிய கடமைகளையும், உரிமைகளையும் கடந்து, அரசியல் செய்திடும் மனோபாவத்தை கண்டித்தும், மேலும், கல்விக்கான உரிமையை மாநில அரசின் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றி உருவாக்கப்பட்டு, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்கலைக் கழகங்களில், துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஆளுநரிடமிருந்து மாநில அரசிடம் பெறும் சட்ட மசோதாவை தமிழ்நாடு ஆளுநர் கிடப்பில் போட்டிருப்பதை கண்டித்தும் கழக மாணவர் அணியின் சார்பில் நான் முன்மொழிந்ததை ஏற்று, இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இவற்றிற்கெல்லாம் தீர்வாக இந்திய அளவிலான மாணவர் கூட்டமைப்பில்,

1) தேசிய கல்விக் கொள்கையை முழுவதுமாக எதிர்ப்பது.

2) சமூகநீதி, இடஒதுக்கீடு, மாணவர்களுக்கான ஊக்கத் தொகை வழங்குதல் இவற்றை பாதிக்கக்கூடிய ஒன்றிய அரசின் கல்வித் திட்டங்களை கண்டித்தல்.

3) தேசிய கல்விக் கொள்கைக்கு மாற்றான வரைவு அறிக்கை ஒன்றை அளித்தல்.

4) மாநில அரசின் கல்வி உரிமையை தடுக்க நினைத்து செயல்படும், ஆளுநர்களுக்கு அதிகார வரம்பை முறைபடுத்துதல், கட்டுப்படுத்துதல், கால நிர்ணயம் செய்தல் உள்ளிட்டவைற்றை வலியுறுத்தியும்.

5) அனைத்திற்கும் தீர்வாக கல்வித் துறை என்பதை, அரசியலமைப்பு சட்டம் இயற்றிய காலத்தில் இருந்தது போல, மீண்டும் மாநில அரசின் பட்டியலுக்கு கொண்டு வருதல்.

6) ஓ.பி.சி. இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசின் அனைத்து துறைகளிலும் குறிப்பாக கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் முழுமையாக செயலாக்கத்திற்கு கொண்டு வருதல்.

ஆகியவற்றை குறித்து விவாதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சமூகநீதி கல்வி உரிமை மாநில உரிமை - கூட்டாட்சி கட்டமைப்பு ஆகியவற்றை கட்டி காக்கின்ற வகையில், இந்திய துணைக் கண்டத்தில் உரத்த குரல் எழுப்பி, முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்து கொண்டிருக்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கழக மாணவர் அணி இந்திய அளவிலான மாணவர் கூட்டமைப்பில் பங்கேற்று, ஜனநாயகவிரோத பாசிச பாஜக ஒன்றிய அரசினை இந்தியா முழுவதும்எதிர்த்து போராடி, வரும் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றும் வரை, முன்களப் படைவீரர்களை கழக மாணவர் அணி செயல்படுமென உறுதியாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கர்நாடகப்

படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே 21-

"கர்நாடகப் படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

500 சந்தேகங்கள்
1000 மர்மங்கள்
2000 பிழைகள்!
கர்நாடகப் படுதோல்வியை
மறைக்க
ஒற்றைத் தந்திரம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில்

திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனை விளக்கக் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் அறிவிப்பு!

நாமக்கல், மே 22-

நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக இளைஞர் அணி சார்பில் மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அலோசனைப்படி திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனைக்கூட்டங்கள் நடைபெறும் விவரம் வருமாறு:-

26.05.2023 4 மணி - பவானிகண்ணன் - மல்ல சமுத்திரம் ஒன்றியம் - வையப்பமலை, 26.05.2023 5 மணி - பவானிகண்ணன் - மல்லசமுத்திரம் ஒன்றியம் - கோட்டப்பாளையம், 26.05.2023 6 மணி - பவானிகண்ணன் - மல்ல சமுத்திரம் ஒன்றியம் - மங்கலம், 26.05.2023 7 மணி - பவானிகண்ணன் - மல்லசமுத்திரம் பேரூர் - மல்லசமுத்திரம்,

27.05.2023 4 மணி - ஆடுதுறை உத்திராபதி - கபிலர்மலை ஒன்றியம் - சோழசிராமணி, 27.05.2023 5 மணி - ஆடுதுறை உத்திராபதி - கபிலர்மலை ஒன்றியம் -ஜேடர்பாளையம், 27.05.2023 6மணி - ஆடுதுறைஉத்திராபதி - கபிலர்மலை ஒன்றியம் -பிலிக்கல்பாளையம், 27.05.2023 7மணி - ஆடுதுறைஉத்திராபதி - வெங்கரைபேரூர் - வெங்கரை, 27.05.2023 4மணி - பவானிகண்ணன் -திருச்செங்கோடு நகரம் - வாலரைகேட், 27.05.2023 5மணி - பவானிகண்ணன் - திருச்செங்கோடு நகரம் - சட்டையம்புதூர், 27.05.2023 6மணி - பவானி கண்ணன் - திருச்செங்கோடு நகரம் - நெசவாளர் காலனி, 27.05.2023 7மணி - பவானி கண்ணன் - திருச்செங்கோடு நகரம் - நாமக்கல்ரோடு, 28.05.2023 4 மணி - ஆடுதுறை உத்திராபதி - மோகனூர் மேற்கு ஒன்றியம் - மணப்பள்ளி, 28.05.2023 5மணி - ஆடுதுறை உத்திராபதி -மோகனூர் மேற்கு ஒன்றியம் - வாழவந்தி,

28.05.2023 6மணி - ஆடுதுறை உத்திராபதி- வேலூர் பேரூர் - வேலூர், 28.05.2023 7மணி - ஆடுதுறை உத்திராபதி - பொத்தனூர் பேரூர் - பொத்தனூர், 28.05.2023 - 8 மணி - ஆடுதுறை உத்திராபதி - மோகனூர் மேற்கு ஒன்றியம் -பாலப்பட்டி, 29.05.2023 4 மணி -பசும்பொன்ரவிச்சந்திரன் -எலச்சிபாளையம் ஒன்றியம்- பெரியமணலி,

29.05.2023 - 5 மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் -எலச்சிபாளையம் ஒன்றியம் -எலச்சிபாளையம், 29.05.2023 - 6 மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் -எலச்சிபாளையம் ஒன்றியம் - மாணிக்கம்பாளையம், 29.05.2023 - 7மணி -பசும்பொன் ரவிச்சந்திரன் - எலச்சிபாளையம் ஒன்றியம் - காந்தி ஆசிரமம், - மோளிப்பள்ளி,

30.05.2023 - 4 மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் - பரமத்தி ஒன்றியம் - நடந்தை, 30.05.2023 - 5மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் - பரமத்தி ஒன்றியம் -மேட்டுக்கடை, 30.05.2023 - 6மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் - பரமத்தி ஒன்றியம் - கூடச்சேரி, 30.05.2023 - 7மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் - பரமத்தி பேரூர் - பரமத்தி, 30.05.2023 - 8 மணி - பசும்பொன் ரவிச்சந்திரன் - பாண்டமங்கலம் பேரூர் - பாண்டமங்கலம், 30.05.2023 4 மணி - போடி கமராஜ் - திருச்செங்கோடு ஒன்றியம் - பேருந்து நிலையம், - பால்மடை 30.05.2023 - 5 மணி - போடி கமராஜ் - திருச்செங்கோடு ஒன்றியம் - விட்டம்பாளையம், 30.05.2023 - 6 மணி

- போடி கமராஜ் -திருச்செங்கோடு ஒன்றியம் - மொளசிரோடு, இறையமங்கலம், 30.05.2023 - 7 மணி - போடி கமராஜ்- திருச்செங்கோடு ஒன்றியம் -T.கைலாசம்பாளையம், 30.05.2023 - 4 மணி - சேலம் சுஜாதா - பள்ளிபாளையம்நகரம் பேருந்து நிலையம், அக்ரஹாரம், 30.05.2023 - 5 மணி - சேலம் சுஜாதா - பள்ளிபாளையம்நகரம் - கண்டிபுதூர், 30.05.2023 - 6 மணி - சேலம் சுஜாதா - பள்ளிபாளையம் நகரம் -ஆவாரங்காடு, 30.05.2023 - 7 மணி - சேலம் சுஜாதா - ஆலாம்பாளையம் பேரூர் -ஆலாம்பாளையம்,

31.05.2023 4 மணி - போடி காமராஜ் - பள்ளிபாளையம் ஒன்றியம் - கொக்கராயன்பேட்டை, 31.05.2023 - 5 மணி - போடி காமராஜ் -பள்ளிபாளையம் ஒன்றியம் -காடச்சநல்லூர், 31.05.2023 - 6 மணி - போடி காமராஜ் - பள்ளிபாளையம் ஒன்றியம் - தட்டாங்குட்டை, 31.05.2023 - 7 மணி - போடி காமராஜ் பள்ளிபாளையம் ஒன்றியம் -கல்லாங்காட்டுவலசு, 31.05.2023 4 மணி - சேலம் சுஜாதா - குமாரபாளையம் நகரம் - சின்னமநாயக்கன் பாளையம், 31.05.2023 - 5 மணி - சேலம் சுஜாதா - குமாரபாளையம் நகரம் - ஆனங்கூர் பிரிவு, 31.05.2023 - 6 மணி - சேலம் சுஜாதா - குமாரபாளையம்நகரம் - அம்மன் நகர், 31.05.2023 - 7மணி - சேலம் சுஜாதா -படைவீடு பேரூர் - படை வீடு.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டங்களில்

சீரான மின் விநியோகம் தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - வி.செந்தில்பாலாஜி பங்கேற்பு

சென்னை, மே 21 -

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பா லாஜி ஆகியோர் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சீரான மின் விநியோகம் வழங்குவது தொடர்பான சிறப்பு ஆய்வு கூட்டம் மேற்கொண்டார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையிலும், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி அவர்கள் முன்னிலையிலும், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சீரான மின் விநியோகம் வழங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மின்சார வாரிய அலுவலர்களுடன் நடைபெற்ற சிறப்பு ஆய்வு நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுவினை அமைச்சர் பெருமக்கள் பெற்றுக்கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் (காஞ்சிபுரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர் (உத்திர மேரூர்), இ.கருணாநிதி (பல்லாவரம்), திருமதி. வரலட்சுமி மதுசூதனன் (செங்கல்பட்டு), சி. வி.எம்.பி.எழிலரசன் (காஞ்சிபுரம்), எஸ்.எஸ்.பாலாஜி (திருப்போரூர்), மு.பாபு (செய்யூர்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர்/பகிர்மானம் மா.சிவலிங்கராஜன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ஆ.மனோகரன்,

செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி. செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. மகாலட்சுமி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ், மறைமலைநகர் நகராட்சி மன்ற தலைவர் ஜெ.சண்முகம் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி மன்ற தலைவர் திருமதி. தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத் வரவேற்புரையும் காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவருத்திரய்யா நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு

நல்லூர் முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்

ந.க.எண்.22 /2023 / அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 19.05.2023

கன்னியாகுமரி மாவட்டம், நல்லூர் முதல்நிலை பேரூராட்சியில் **மூலதன மானிய நிதி (CGF) 2002-2023ன் கீழ் ரூ.133.00 இலட்சம் மதிப்பீட்டில்** நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட ஆராய்சியிளை முதல் காவுமூலை மண் சாலையை பேவர் பிளாக்சாலையாக அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **09.06.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ–டெண்டரிங் முறையில் (இரண்டு உறைகள் முறை) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. தொழில்நுட்ப ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களின் விலைப்புள்ளி திறக்கப்பட்டு அதனடிப்படையில் இறுதிசெய்யப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் **08.06.2023** ஆம் தேதி **வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி** வரை https://tntenders.gov.in https://tenders.tn.gov.in என்ற இணையதளம் மூலம் E-Token / Digital Signature card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

தலைவர்
நல்லூர் முதல்ந